# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (02.09.2015 முதல் 06.09.2015)

**அறிக்கை எண் 68/2015** **தேதி: 01.09.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 31°செ முதல் 37°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 21°செ முதல் 29°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 18°செ முதல் 23°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் இலேசான மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (02.09.2015 முதல் 06.09.2015)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70-74 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 52-56 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 02.09.15 | 1 | 34 | 23 | 5 | 70 | 52 | 14 | தெற்கு |
| 03.09.15 | 2 | 34 | 23 | 5 | 72 | 54 | 14 | தெற்கு |
| 04.09.15 | 3 | 34 | 23 | 5 | 72 | 54 | 14 | தெற்கு |
| 05.09.15 | 10 | 33 | 22 | 6 | 72 | 54 | 14 | தெற்கு |
| 06.09.15 | 6 | 33 | 22 | 6 | 74 | 56 | 14 | தெற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ *சம்பா நெல் நாற்றாங்காலில் இலைப்பேன் தாக்குதல் தென்படுவதால் 1 லிட்டர் தண்ணீரில் 2 மில்லி மோனோகுரோட்டோபாஸ் கலந்து தெளிக்கவும். மேலும் நோய் தாக்குதலை கண்காணிக்கவும்.*
- ✓ *இறவையில் நடப்பட்ட குளிர் கால கம்போடியா பருத்தி மற்றும் மக்காச்சோளத்தில் அதிகப்படியான பயிர்களை களைந்து விடவும்.*
- ✓ *வரும் ஐந்து நாட்களுக்கு லேசான மழையும் அதிக காற்றின் வேகமும் எதிர்பார்க்கப்படுகிறது. ஐந்து மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும்.*
- ✓ *ஓணம் பண்டிகைக்கான பழங்கள் அறுவடை செய்யப்பட்ட வாழை மரங்களை தூறுடன் வெட்டி சாய்த்து துண்டுகளாக்கி இயற்கை உரமாக்கவும்.*

**குறுஞ்செய்தி**

- ✓ *வரும் ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கபடுகிறது. இறவையில் நடப்பட்ட குளிர் கால கம்போடியா பருத்தி மற்றும் மக்காச்சோளத்தில் அதிகப்படியான பயிர்களை களைந்து பயிர் எண்ணிக்கையை பராமரிக்கவும்.*

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**